ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

32

# நாட்டுப்புறத் தெய்வம்

**முனைவர்ப.ஈஸ்வரி [1] , சு. திலகவதி [2]**

**[1]தமிழ்த்துறை, வேளாளர் மகளிர்கல்லூரி(தன்னாட்சி), திண்டல், ஈரோடு - 638012**

**[2] நவரசம் கலை மற்றும் அறிவியல் மகளிர்கல்லூரி அறச்சலூர்**

**திறவுச் சொற்கள்**

நாட்டுப்புற தெய்வ வழிபாடு மூலம் குல தெய்வ வழிபாட்டின் முக்கியத்துவத்தைப் பதிவிடுதல்.

**ஆய்வுச் சுருக்கம்**

சங்க கால இலக்கழயங்கள் முதல் இக்கால இலக்கியங்கள் வரை பெருந் தெய்வ வழிபாட்டிற்கு இணையாக நாட்டுப்புற தெய்வ வழிபாட்டிற்கு முக்கியத்துவம் இடம்பெறுகிறது. நாட்டுப்புற தெய்வங்களான கருப்பராயன், ஐயனாரப்பன், சப்த கன்னியர்கள், கொற்றவை, இயற்கை வழிபடுதல் என்று நாட்டுப்புற தெய்வங்களாக மக்கள் இன்றளவும் வழிபட்டு வருகின்றனர். இத் தெய்வங்கள் தங்கள் குலத்தையும், வாழ்வியலுக்குத் துணையாகவும், பாதகாப்பாகவும், காக்கும் தெய்வங்களாகவும் அருள்பாலிக்கும் என்ற நம்பிக்கை வழிபாடாக நாட்டுப்புற தெய்வங்களை வணங்குகின்றனர். இத்தெய்வங்கள் ஊரின் எல்லையில் இருந்து ஊர்த் தெய்வமாகவும் முன்னோர்களாக நினைத்து வணங்கி வருவதை இக்கட்டுரையில் விரிவாகக் காண்பதே இவ்வாய்வின் சுருக்கப் பதிவாகும்.

**முன்னுரை**

கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற பழமொழியேதமிழகத்தில் வழங்குகிறது. நல்லது நடந்தால் தெய்வ அருள் என்றும் தீயலை நடந்தால் தெய்வத்தின் கோபம் என்றும் நம்புகின்றனர். நாட்டுப்புறமக்கள் நாட்டுப் புறத் தெய்வங்களை நம்பிக்கையுடனும் அச்சம் கலந்த உணர்வுடனும் வழிபடுகின்றனர்.

**இயற்கை வழிபாடு**

ஆதிமனிதன் இயற்கையோடு இணைந்த வாழ்வு நடத்தினான். இயற்கையின் சீற்றத்தால்பாதிக்கப்பட்டான். இயற்கையை வழிபட ஆரம்பித்தான்.இயற்கையை வழிபட ஆரம்பித்துவிழாவெடுத்து நன்றிக்கடன் ஆற்ற விரும்பினான். நாட்டுப்புற மக்களிடையே இன்றும்இயற்கையை வழிபடுவதைக் காணலாம். சிலம்பில் கூட ஞாயிறு போற்றுதல் என்ற இயற்கைவழிபாட்டைக் காணலாம். ஞாயிறு, சந்திரன், மழை, மரம், செடி, கொடிகள் முதலியவற்றைவழிபடுவதைக் காண்கிறோம். நாட்டுப்புற மக்கள் நிலவைக் கும்மியடித்து வழிபடுவதைக்காண்கிறோம்.

கதிரவனின் பேரொளியையும் காற்றின் சீற்றத்தையும் மழையின்பொழிவையும்

இருளின்மறைப்பையும் கண்டு அஞ்சி அவற்றை வழிபட ஆரம்பித்தார்கள். பழங்கால மக்கள்இயற்கையில் கண்ட பெருநிகழ்ச்சிகளை உள்ளத்தே கொண்டு அஞ்சியதாலேயே இவ்வழிபாடுதோன்றியது. இயற்கைத் தோற்றப் பொருள்களாகிய கதிரவன், மதி, மழை, மின்னல் என்னும்முதலான பொருள்களைக் கண்டு ஏற்பட்ட வியப்பு, அதிர்ச்சி, அச்சம் என்னும் உள்ளத்துஉணர்வுகளே சமயம் தோன்றக் காரணமாயின. கதிரவனின் இயக்கமும் மதியின் இயக்கமும்பருவங்களின் மாறுதல்களும் இயற்கை நியதியின் விளைவு மனிதனின் மனதில் ஒரு பாதிப்பைஉண்டாக்கிச் சமய வாழ்வுக்கு நம்பிக்கை அளிக்கின்றன.

**சிறு தெய்வ வழிபாடு**

நாட்டுப்புறத் தெய்வங்களைத் தான் சிறு தெய்வங்கள் என அழைக்கிறோம். குடும்பதெய்வ வழிபாடும் குல தெய்வ வழிபாடும் ஊர்த் தெய்வ வழிபாடும் இவற்றில் அடங்கும். வீட்டில்யாரேனும் துன்புற்றாலும், நோய்வாய்ப்பட்டாலும் குடும்ப தெய்வத்திற்கு பூஜை செய்வர். குடும்பதெய்வத்தின் பெயரைப் பிள்ளைகளுக்கு வைப்பர். ஒவ்வொரு குலத்திற்கும் ஒரு தெய்வம்உண்டு. இன்றும் நாட்டுப்புறங்களளில் அந்தந்த குலத்திற்குத் தெய்வத் துணை எனத் திருமணஅழைப்பிதழில் அச்சிடுவதைக் காணலாம். ஒரே குல தெய்வத்தை வழிபடுபவர்கள் அனைவரும்பங்காளிகளாவர்.

'குருவை மறந்தாலும் குலதெய்வத்தை மறவேன்…

'குலதெய்வத்தைக் கும்பிட்டுக் கும்மியடி…

என்பது குல தெய்வ வழிபாட்டின் சிறப்பனைக் கூறுகிறது. சில நேரங்களில் செல்வாக்குமிக்ககுலதெய்வம் ஊர்த்தெய்வமாகவும் பின்னர்பலஊர்த்தெய்வமாகவும் மாறுவதுண்டு.

சிறு தெய்வங்கள் வேதக்கடவுளோடு பெரும்பாலும்தொடர்பு; கொள்ளததாவை முழுமுதற்கடவுளாகக் கருதி வணங்கப்படாதவை. பூசை, திருவிழா முதலியவற்றில் திட்டவட்டமானவரையறை கிடையாது. பிராமணர்அல்லாதோர்பூசாரியாக இருப்பர். கோவில் போன்றஅமைப்பும் பெரும்பாலும் கிடையாது. செவிவழிச் செய்திகளும், பரம்பரைக் கதைகளும் உண்டு.அச்சத்தின் காரணமாகவும், வளமைக்காகவும் இயற்கையின் சீற்றம் தணியும் அம்மை, காலராபோன்ற நோய்களைத் தடுக்கவும் நாட்டுப்புறத்தெய்வங்களை வழிபடுகின்றன. சிறுதெய்வங்களில் மாரியம்மன், அய்யனார்போன்றவை பெரும் பாரம்பரிய மரவை நோக்கிச்சென்றுகொண்டிருக்கின்றன. இதனால் இத்தெய்வகளை இடைநிலைப்பட்ட தெய்வங்கள் என்றுகூறுவர். பிராமணர்பூசாரி, உயிர்ப்பலி அன்மை, திட்டவட்டமான பூசை, திருவிழா,ஆகமவிதிப்படி கோயில், உருவச்சிலையில் மாற்றல் முதலியவற்றால் ஜோஸ்பின் கலா அவர்கள்இடைநிலைப்பட்ட தெய்வங்கள் என்கிறார். இத்தெய்வ வழிபாடுகளை ஆழ்ந்து நோக்கின்ஆரியமயமாகும் தன்மையயைக் காண்கிறோம்.

நாட்டுப்புறங்களில் நாட்டுப்புறத் தெய்வங்கள் தான் அதிகமாக உள்ளன. அவர்களதுவாழ்வோடு வாழ்வாகப் பின்னிப் பிணைத்துவிட்டன. நாட்டுப்புறத் தெய்வங்களே நாட்டுப்புறக்கலைகளின் வளர்ச்சிக்குக் காரணமெனின் மிகையாகாது. தமிழகமெங்கும் மாரியம்மனின்வழிபாடு காணப்படுகிறது. "ஆருடன் நின்றாலும் மாரிகடன் ஆகாது" என்ற

நம்பிக்கையைமக்களிடம் காண்கிறோம். மாரியம்மனை வேண்டுவது போல் காளியம்மனையும்வேண்டுகின்றனர். மாரியம்மன் வழிபாட்டைப் போன்ற அய்யனார்வழிபாட்டையும் காணலாம்.

'ஊருக்கு நேர்கிழக்கே உறுதியுள்ள ஐயனாரே...

'சத்தத்தை நீ கொடய்யா சரளிவிட்டு நான்படிக்க...

என்று ஐயனாரைப் பற்றிப் பாடுகின்றனர். அய்யனார்காவல் காக்கும் தெய்வமாகக்கருதப்படுகிறார். நாட்டுப்புறத் தெய்வங்களில் வேளாண்மையோடு தொடர்புடைய பெண்தெய்வங்கள் தான் அதிகம். நாட்டுப்புறத் தெய்வங்கள் தங்களுடைய விருப்பங்களையும்நிறைவேற்றப்பட வேண்டிய வேண்டுதல்களையும் தெய்வ நிலைக்குட்பட்ட பூசாரி,அருள்வந்தோர்மூலமாக அறிந்து கொள்கிறார்கள். நாட்டுப்புறத் தெய்வங்களை வளமையைக்கொடுப்பனவாகவும், ஆறு, குளம் முதலியவற்றைக் காப்பனவாகவும், கொடிய நோயிலிருந்துகால்நடைகளை காப்பனவாகவும், கிராமத் தெய்வமாகவும் கருதுகின்றனர். நாட்டுப்புறத்தெய்வங்கட்டு வேண்டுதலை நிறைவேற்றாவிட்டால் துன்பம் நல்கும் என நாட்டுப்புற மக்கள்நம்புகின்றனர். நாட்டுப்புற மக்கள் பெருந்தெய்வங்களை வழிபட்டாலும் நாட்டுப்புறத் தெய்வவழிபாட்டில் வேறுபாடு அதிகம் காணமுடிகிறது. நாட்டுப்புறத்து தெய்வ வழிபாட்டு முறையைநுணுகி ஆராய்ந்தால் அது தனித்து விளங்குவதைக் காணலாம்.

**பெருந்தெய்வ வழிபாடு**

நாட்டுப்புற மக்கள் நாட்டுப்புறத் தெய்வங்களை மட்டுமின்றி பெருந்தெய்வங்களையும் வழிபடுகின்றனர். சிவன், திருமால், முருகன், பிள்ளையார் மக்களிடையே செல்வாக்குப் பெற்றதெய்வங்கள் பெருந்தெய்வங்கள் வேதக் கடவுளோடும் அதனொடு பெற்ற தெய்வங்கள் பெருந்தெய்வங்கள் வேதக் கடவுளோடும் அதனொடு தொடர்பு கொண்ட கடவுளாகவும் கருதப்படுகின்றன. ஆகம விதிப்படி கோயிலும் திட்டவட்டமான பூஜை, திருவிழாக்களும்உண்டு. வழிபாட்டு முறையில் பிராமணிய முறை பின்பற்றப்படுவதோடு திருவிழாக்களும் குறித்தகாலத்தில் நடைபெறுகின்றன.

**கோவில் அமைவிடம்**

பெரும்பாலான நாட்டுப்புறத் தெய்வக் கோயில்கள், பீடங்களாகும். பீடங்களேகோயில்களாகக் கருதப்படுகின்றன. பீடங்களும் மண்ணாலும், சிமெண்டாலும் கல்லாலும்அமைந்திருக்கும். விழாக் காலங்களில் மட்டும் பந்தல் போட்டுத் தோரணங்கள் கட்டுவர். சிலதேவைகளுக்கு மண்ணாலான மண்டபம் கட்டுவர். சில இடங்களில் கல்லாலான மண்டம்கட்டியுள்ளனர். கோயில்கள் அதில் உறையும் தெய்வத்தின் பெயரால் அழைக்கப்படுகின்றன.சில நாட்டுபடபுறத் தெய்வங்களுக்கு ஆகம விதிப்படி கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன.கருவறை, முன்மண்டபம், கொடிக்கம்பம், சுற்றுச் சுவர்கள் எழுப்பப்பட்டுள்ளன. மாரியம்மன்போன்ற தெய்வங்களுக்கு அத்தகைய கோயில்களைக் காணலபம். கர்ப்பக் கிரகத்தைச் சுற்றிப்பல துணைத் தெய்வங்கள் இருக்கும். கிராமக் கோயில்கள் மரங்களுடன் தொடர்புடையனவாகஉள்ளன. மரங்கள் வளமைக் குறியீடாககட கருதப்படுகின்றன. பெரும்பாலான நாட்டுப்புறத்தெய்வங்கள் நீர்நிலைக்கருகில் இருக்கும் மக்களது வாழ்வில் நீர்முக்கிய

பங்கு வகிப்பதால்நீர்நிலைக் கருகிலேயே வைத்துள்ளனர்.

**வழிபாட்டு முறைகள்**

நாட்டுப்புறத் தெய்வங்களுக்குக் கொண்டாடப்படும் விழாவைத் திருநெல்வேலிமாவட்டத்தில் „கொடை… என்றும் மற்ற மாவட்டங்களில் „பொங்கல் வைத்தல்… அல்லது „சாமிகும்பிடுதல் என்றும் அழைக்கின்றனர்…. வுழிபாட்டு முறைகள் தெய்வத்திற்குத் தெய்வம்வேறுபடுவதுண்டு. திருநெல்வேலி மாவட்ட நாட்டுப்புறத் தெய்வ வழிபாட்டு முறைகள் மற்றமாவட்டங்களின்றும் வேறுபட்டு நிற்கின்றன. ஆண் தெய்வங்களுக்கு வௌ;ளிக்கிழமையும்,பெண் தெய்வங்களுக்குச் செவ்வாய்க்கிழமையும் கொடை நடைபெறும்.

முழை இல்லாக்காலத்து மழை வேண்டியும் விளைச்சல் பெருகவும் நோய்நொடிவராதிருக்கவும் பகை ஏற்படின் பகைக்குப் பின் சமரச முயற்சியாகவும் சாமி கும்பிடுவது உண்டு.சாமி கும்பிடுவது என முடிவு செய்துவிட்டால் பல்லி சகுனம் Nகுட்பர். பூக்கட்டிப் பார்ப்பர். நல்லசகுனம் கிடைத்த பின்பு ஊர்சாற்றுவார்கள். கோயில் கும்பிடுவதற்கு அடையாளமாகக் காப்புகட்டுவர்.

சாமி கும்பிடுவதற்கு வீட்டுவரி போடுவர். சில இடத்தில் தலைக்கட்டு வரி போடுவர்.இதற்கிடையில் மேளக்காரருக்கும் குசவர்க்கும் அச்சாரம் கொடுப்பர். கோயில் முன்பும் ஊரின்நடுவிலும் பந்தல் போடுவர். நேர்த்திக்கடன் உள்ளோர்விரதமிருப்பர்.

சாமி கும்பிடும் நாளன்று மண்ணால் செய்த தெய்வ உருவச் சிலையைக் கொணர்ந்துகண் திறப்பர். சிலையைக் கோயிலில் வைத்தவுடன் கிடா வெட்டிப் பொங்கல் வைப்பர்.பொங்கல் வைத்துத் தேங்காய் பழம் வைத்துச் சாமி கும்பிடுவதைச் சிறப்பு நடத்துதல் என்பர்.பின்னர்மாவிளக்கு, முளைப்பார்கொண்டு வருவர். முளைப்பாரியைச் சுற்றிப் பெண்கள்கும்மியடிப்பர். நேர்த்திக் கடன் உள்ளோர்செலுத்துவர். கவர்குத்தி ஆடுவர்சிலர்.மரத்தொட்டில் செய்து கோயிலில் வைப்பர். நேர்த்திக் கடனுக்காக மொட்டையடிப்பதும்,அங்கமளித்தும் காணிக்கைச் செலுத்தலும் அக்னிச் சட்டி எடுப்பதும் உண்டு. சில இடங்களில்தீக்குழி இறங்குவதும் உண்டு.

மறுநாள் காலையில்கிடா வெட்டி ரத்தத்தைப் பிடித்துச் சோற்றில்தோய்த்துச் சோற்றுத்திரளையைக் காவு கொடுப்பர். இஃது மயானத்தில்நடைபெறும். சுடலை மாடன் கோயிலில்பன்றியைப் பலியிடுவர். பலியிட்ட பின்பு அனைவருக்கும் விருந்து அளிக்கப்படும்.குழந்தைகளுக்கு காதுகுத்திப் பெயர்வைப்பர். மாலையில் பள்ளயம் பிரிப்பர். அன்றிரவு கலைநிகழ்ச்சியோ, நாடகமோ நடைபெறும். இதில் கிராமப் பெருந்தனக்காரரும் கிராமப்பூசாரியும் பெரும்பங்கு வகிக்கின்றனர்.

காணிக்கை செலுத்தல், அங்கமளித்தல், காவடி எடுத்தல், கரகமெடுத்தல் , பால்குடம்எடுத்தல், மொட்டையடித்தல், மிருகங்களை நேர்ந்துவிடல் போனற் சடஙகுகள்உண்டு. சிறுதெய்வங்களுக்கு கருவாடு, சுருட்டு, கஞ்சா, சாராயம் முதலியவற்றைப் படைப்பதுண்டு. சிலதேவதைகளுக்கு ஆடு, கோழி, பன்றி பலியிடுவதுண்டு. சஙககால மக்கள் பசுவினைப்பலியிடுவதுண்டு. சஙககால மக்கள் எலுமிச்சை, பூசணி பலி கொடுப்பதைக் காண்போம்.உயிரில் பலி தொடங்கிய கால கட்டத்தில் இம்மாற்றம் நிகழ்ந்திருக்கலாம். நேர்த்திக்கடன்நேர்ந்தோர்தெய்வத்தைப் போன்ற உருவம் செய்வது

நேர்வதுண்டு பொங்கல், சித்திரை நாள்,ஆடி, கார்த்திகை நாட்களில் கோயிலுக்குச் சென்று சாமி கும்பிடுவர். சாமி கும்பிடும் நாட்களில்கரகமெடுத்தல், காவடி எடுத்தல், நையாண்டிமேளம்கணியன்ஆட்டம்வில்லுப்பாட்டுபோன்றகலைநிகழ்ச்சிகள் நடைபெறும். திருநெல்வேலி மாவட்டக் கொடை விழாவில் கணியன்ஆட்டமும், வில்லுப்பாட்டும் விழாவோடு இணைந்ததாகும். இவ்விரண்டும் இல்லாமல்கொடையே கிடையாது. பிரசாதங்களாக துளசி, வேப்பிலை, திருநீறு, குங்குமம், பூ, தீர்த்த நீர்போன்றவை வழங்கப்படுகிறது. விழாக்காலங்களில் சாதி வேறுபாடின்றி அனைவரும்பங்கெடுப்பது குறிப்பிடத்தக்கது.

பெரும் பாரம்பரிய மரபை நோக்கிச் செல்லும் மாரியம்மன் போன்ற தெய்வங்களுக்குதிருவிழா நடைபெறும். சில தெய்வங்களுக்குத் தேர்த்திருவிழா நடைபெறும். மாரியம்மனுக்குதீமிதி விழா நடைபெறுகின்றது. திருவிழாக்களில் மாவிளக்கு போடல், செடல் குத்திக்கொள்ளல், தீ மிதித்தல், பாடை கட்டி இழுத்தல், வேம்படை தரித்தல் போன்ற வேண்டுதல்கள்நிறைவேற்றப்படும். திரௌபதியம்மன் கோவில் விழாவில் தெருக்கூத்து நடைபெறும். வீரபாண்டிமாரியம்மன் விழாவில் மாட்டுத்தாவணி இருக்கும். திருவிழாக்களின் போது சந்தை கடைகள்போடப்படுவதையும் காண்கிறோம். நாட்டுப்புறத் தெய்வ வழிபாடு மக்களின் எண்ணங்களையும்நம்பிக்கையையும் வழிபாட்டு முறைகளையும் தொன்மை சமயத்தின் கூறுகளையும் பிரதிபலித்துநிற்பதைக் காண்கிறோம்.

**நிறைவாக**

நாட்டுப்புற மக்களின் வாழ்வில் ஏற்படும் இன்ப துன்பங்களுக்கும் நோய்நொடிக்கும்நாட்டுப்புறத் தெய்வங்களையே தஞ்சமடைகின்றனர். படையல்களும் பலியும் இட்டுத் தங்கள்வேண்டுதல்களை நிறைவேற்றிக் கொள்கிறார்கள். விழா எடுப்பதன் மூலம் உள்ளத்திற்குமகிழ்வும் உறவுக்குத் தொடர்பும் ஏற்படுத்திக் கொள்கிறார்கள். நாட்டுப்புறத் தெய்வ வழிபாட்டைநன்கு ஆராயின் தொன்மை மதத்தைப் பற்றி நன்கு அறிந்து கொள்ளலாம்.

**மேற்காண் நூல்கள்**

1. டாக்டர். சு. சக்திவேல் - நாட்டுப்புறவியல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
2. ஆறு. இராமநாதன் - நாட்டுப்புறவியல் ஆய்வு முறைகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.